# மஹ்பூபு மனோன்மணி கீதம்.

ஆக்கம்: மௌலவி அஷ்ஷெய்கு அஹ்மது வெள்ளிமீரான் நூரிய்யி, ஸூபி ஹழ்ரத் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஜீஸ்

**கீதம் 1**

(நல்வாக்கு நீ கொட்டி என்ற மெட்டு)

1. ஹக்கனில் யான் கலந்து காட்சியடைவதெப்போ

   காட்சியடைவதெப்போ நான் மாட்சியடைவதெப்போ

2. ஹக்கன் ஹலரத்திலே கால் கூசி நிற்பதெப்போ

   கால் கூசி நிற்பதெப்போ நான் மேல் கூசி நிற்பதெப்போ

3. வாசல் படியருகில் வா வென்றழைப்ப தெப்போ

   வா வென்றழைப்ப தெப்போ என்னைத் தாவி நுழைப்பதெப்போ

4. கருணைக் கரத்தாலென்னை கட்டித் தழுவதெப்போ

   கட்டித் தழுவதெப்போ நான் எட்டி விழுவதெப்போ

5. முச்சந்தி வீதியிலே முத்தியடைவதெப்போ

   முத்தியடைவதெப்போ நான் சித்தி பெறுவதெப்போ

6. முப்பாலெனுங் கடலில் முங்கிக் குளிப்பதெப்போ

   முங்கிக் குளிப்பதெப்போ நான் தங்கித் தனிப்பதெப்போ

7. தன்னிலைதான் மறந்து தாவிப்பிடிப்பதெப்போ

   தாவிப்பிடிப்பதெப்போ நான் மேவித் துடிப்பதெப்போ.

**கீதம் 2**

(மானமெல்லாம் போனபின்பு என்ற மெட்டு)

1. கல்பே உன்னில் ஹக்கன் வரக்காணேனே என்ன செய்வேன்

2. உள்ளதையே கள்ளமில்லாது உண்மை யெனக் கெடுத்தோது

3. காட்சி தரும் ஹக்கன் வராக் காரணமேது நீ சொல்லு

4. நினைவு தடுமாறினதால் நேர்முன் வராததாமோ

5. மதிமயங்கி வாடுவதையென் மஹ்பூபிடம் நீ சொல்லு

6. அடிமை மனம் ஏங்குவதையென் அல்லாஹ்விடம் நீ சொல்லு

7. கருணை செய்யும் கண்மணியை காதலித்தே னென்று சொல்லு

8. வள்ளலையே காணாது நான் வாடுகிறேனென்று சொல்லு

9. பாவி மனம் வாடிவாடி பரதவிப்பதையும் நீ சொல்லு

10. தூயனையே காணவென்றே துணிந்து வந்தே னென்று சொல்லு

11. மண்டபத்தில் காட்சி தந்து என் மையலைத் தீர்த்திடச் சொல்லு

12. சிறந்த பொற்சிம்மாசனத்தில் என்னைச் சேர் திருக்கவுஞ் சொல்லு

13. ஆட்டிவைக்கும் ஆங்காரத்தை அனந்தரங் கொள்ளவுஞ் சொல்லு

14. மாங்காயினுள் வண்டது போல் மயங்க வந்தேனென்று சொல்லு

15. மெஞ்ஞானச் சுடரொளியை விட்டுவிடேனென்று சொல்லு.

**கீதம் 3**

(பூமியில் மானிட ஜென்மம் என்ற மெட்டு)

1. அகந்தனிலிலங்கிய ஆதியைக் கண்டிட

ஆஷிகே நீயும் ஆசை வைப்பீர்

ஜோதி இலங்கிய தூயனைக் கண்டிட

தொகுத்து நீ என்பதை அழித்திடுவீர்

2. கல்பதன் காட்சியை கண்டு தரிசிக்க

ஜதுபெனும் இஷ்கை ஏற்றிடுவீர்

ஜாமிஉல் அஸ்மாவை ஞாபகமுடன் கல்பில்

காமிலிடம் பேட்டுக் கருதிடுவீர்

3. ஆலத்தில் நிறைந்திடும் அஹதெனும் பொருளதை

அனுதினம் அகந்தனில் நினைத்திடுவீர்

கோலத்தில் அது நின்று குறிப்பாயிலங்கிடும்

ஹூவென்பதை யன்றி வேறில்லையே

3. நெற்றி வெளிநடு மத்திபத்தில் நின்று

நேரேயிலங்கிடும் முத்தது போல்

கத்தோனருறதைப் பெற்றவரே என்று

காமிலொலிமார்கள் சொன்னதுவே

4. தன்னை மறந்து தவத்திலிருக்கையில்

மின்னலைப் போலெங்கும் விளங்கிடுமே

சொல்லரிதாகிய சுக வாரியானதில்

சொக்கி இருந்திடுவாய் சுதனே

5. அஹது உஹது வாஹிதிய்யாவெனும்

அரும் பொருளானதை அறிந்திடுவீர்

அஸ்மா ஸபாத்தினில் அடங்கிடுவாய் மகனே

7. கானலை நேரொத்த மாய துன்யாவினில்

காலத்தை வீணிலே தள்ளிடாதீர்

மாயுமுன் மாய்ந்து மஹ்பூபைச் சேர்ந்து நீ

மாறா அமிர்தத்தை அருந்திடுவீர்.

**கீதம் 4**

1. கல்பதைப் பாரும் அதில் காட்சியே தோணும்

கவலைகளை அகற்று ஹக்கன் தனை நிறுத்து

திக்குதிசைகளெஹ்கும் ஒக்க ஒளிவாக மாற்று

(கல்பதை)

2. தானென்ற நினைவை மாற்று தஜல்லீ இலாஹை ஏற்று

கோனென்ற குறிப்பை தோற்று குருவை நயனத்திடையே சாறற்று

(கல்பதை)

3. நானென்ற சொல்லை வில்லு கோனென்ற குறிப்பில் நில்லு

இன்னல்லா ஹஷ்தரா யென்றே இறைவன் சொன்ன சொல்லு

(கல்பதை)

4. கல்பின் கறளைப் போக்கு ஐத்பின் வழியை நோக்கு

வேறென்ற சொல்லை நீக்கு நாறை விட்டு நீ நற்கதி பெற்றிட

(கல்பதை)

5. வெட்ட வெளியாகி விடும் தொட்டபர்க்குக் சிட்டிவிடும்

மட்டில்லாத மகிமை முற்றிடும் மாளா வரம் பெற்று வாழ்ந்து யிருந்திட

(கல்பதை)

6. ஆரிபீன்களின் வழியே அதபுடனதிற் தெளியே

தூங்காமல் தூங்கி நீயே சூட்சுமங்களைக் கண்டு சொக்கி யிருந்திட

(கல்பதை)

7. உன்னிலே உற்றுப்பாரு உண்மை விளங்கும் நேரு

காமில் குரவைச் சேரு காணலாம் உன்னிலே காட்சியனைத்தையும்

(கல்பதை)

**கீதம் 5**

(முன்னே ஸலாம் சொல்லிவாடி என்ற மெட்டு)

வெட்ட வெளியாகிப் போமே மெஞ்ஞான தீபம்

வெட்ட வெளியாகிப் போகும் மட்டில்லாத மகிமை வாய்க்கும்

(வெட்ட)

தொட்டிடத் திறப்பாள் மாது நிஷ்டையில் இருந்து நோக்க

(வெட்ட)

நட்டனடுவீடு செல்லவும் நேரிலங்கே

நற்பவழக் கொப்பு மின்னவும்

வட்ட வடிவொன்று துள்ளவும் நமக்கு இங்கே

வாய்த்ததென்றே மனம் கொள்ளவும்

கட்டியே அணைவோமென்று கிட்டவே நெருங்கும்போது

தட்டியே விட்டேமறைந்து தவசிலிருப்பாள் மாது

(வெட்ட)

காதொடுகண் நாவடைக்கவும் அதன்பின்னால் நீ

கல்பதைத்துடைக்க நோக்கவும்

ஜாமிவுல் அஸ்மாவைத்தாக்கவும் இருதயத்தில்

லாஅன இல்லா ஹூவென்றேற்கவும்

நானெனும் பதரைநீக்கி கோனெனும் வுஜூதை நோக்கி

நாபகௌஸைனிதன்னில் கருத்தை நிறுத்திப் பார்க்க

(வெட்ட)

கோலங்குறிப்பற்றிருந்திட குதா ஒளிவில்

குறிப்புடன் கலந்து சேர்ந்திட

தௌ;ளியவான் ஜோதிதெளிந்திட தினந்தினமும்

தெவிட்டிடா அமிர் தமருந்திட

துக்கம் துயரமற்று ஹக்கனை திக்ரு செய்து

மிக்க அமிர்தப்பாலை தக்கபடியே அருந்த

(வெட்ட)

ஆதியின் மேல் ஆசை பூட்டவும் அடர்ந்தடர்ந்து

அக்கினியைத்தானே மூட்டவும்

ஜோதியின் சுகத்தையூட்டவும் துறவியரின்

வீதியில் மனதை நாட்டவும்

மவுத்தகு முன்னேநீயும் மவுத்தாகியே இருந்து

தவத்தின் முறைப்படியே தானே ஷுஹூது செய்ய

(வெட்ட)

இல்லல்லாஹுவென்று சொல்லவும் இருதயத்தில்

இணையறுத்துக் கொள்ளவும்

குல்ஹுவல்லாஹுவென்று கூறவும் அதன் பொருளை

குரவிடமறிந்து கொள்ளவும்

முவ்வாசை தன்னை நீக்கி முப்பாழ்தனிலே நோக்கி

தப்பாமலே ஷரஜ தாவிர்ரித்துப் பார்க்க

(வெட்ட)

**கீதம் 6**

**(காவிக்கிரங்கியே என்ற மெட்டு)**

காட்சி கொடுக்கலாகாதா ஹக்கனே நீயும் (காட்சி)

காவியென்றே என்னை பார்த்துக் கழித்திடாமல்

காதலைத் தீர்க்கலாகாதா ஹக்கனே நீயும்

(காட்சி)

மண்ணது விண்ணாய் மறைகள் அனைத்துமாகி

அண்ணல் அஹ்மதுமானாய் ஆதியே நீயும்

(காட்சி)

அமாவெனும் மர்தபாவில் அறியாதிருப்பதுடன்

ஆலத்தில் கோலமுமானாய் அஹதே நீயும்

(காட்சி)

நானென்றும் வேறென்றும் நாடியிருப்பவர்க்கு

தூராதி தூரமுமானாய் தூயோனே நீயும்

(காட்சி)

தன்னிலே தானாய் தவம் செய் துறவியர்க்கு

முன்னிலே ஜோதியுமானாய் முஷாஹதாவில்

(காட்சி)

இருதயக்கறள் என்ள இணையையறுத்தவர்க்கு

தருவேன் தஜல்லியாத் தென்றாய் தன்னிலே தானாய்

(காட்சி)

சேவடி நாடி தேடிவருபவனை

சோதனை செய்யவேண்டுமா ஸுப்ஹானியே நீயும்

(காட்சி)

**கீதம் 7**

(தெருவினில் வாராண்டி என்ற மெட்டு)

1. ஜோதி மணிமண்டபத்தை திறந்து நீபாரு

அதைத் திறந்துபார்க்க அதிசயத்தை அறியலாம் நேரு

அறியலாம் நேரு அதில் தெரியுமே நூரு

(ஜோதி)

2. வெற்றிபெற்ற உத்தமர்க்ள நத்திய வீடு

அதில் கத்தனருள் முக்திபெற காமிலைத்தேடு

காமிலைத்தேடு ஹக்கன் ஜோதியில் கூடு

(ஜோதி)

3. ஓங்காரக் கம்பமதை உற்று நீ பாரு

பாங்கி ஒளித்திருந்து வெளிப்படுவான் உல்லாசத்தோடு

உல்லாசத்தோடு ஒளிபிரகாசத்தோடு

(ஜோதி)

4. அஹதியத்அதனும் கடலே ஆதியுமாச்சு

அதிலெழுந்த அலைகளது ஆலமுமாச்சு

ஆலமுமாச்சு அதுவே கோலமுமாச்சு

(ஜோதி)

5. குல்லுமவன் செயலென்ற குறிப்போடு நில்லு

குல்-குல்லுமின் இந்தில்லாஹ் என்றதை விள்ளு

என்றதை விள்ளு இருதயந்தனில் கொள்ளு

(ஜோதி)

6. இல்லல்லாஹுவென்று சொல்லி இணையதைத் தள்ளு

ஏகபராபரம் பொருளை எங்குமே கொள்ளு

ஏகபராபரம் கொள்ளு அதில் தங்கியே நில்லு

(ஜோதி)

7. அய்னமாதுவல்லூ வென்று ஆதி சொன்னதே

அது அனைத்துமே அவனே என்ற அற்புதமதே

அற்புதமதே நீயுமுணர்ந்திடுமிதே

(ஜோதி)

**கீதம் 8**

(காதலெல்லாம் கொள்ளை கொண்டாய் என்ற மெட்டு)

1. காயம் அழியுமுன்னே றப்பே றப்பே என்னை

நேயம் வைத்து ஆளNவுணும் றப்பே றப்பே (காயம்)

1. கொல்லுமெமன் கொண்டு போமுன் றப்பே றப்பே றப்பே என்னைத்

தள்ளிடாமல் தாபரிப்பாய் றப்பே றப்பே

2. காலம் வீணாய் போகுதெந்தன் றப்பே றப்பே உன்னை

கண்டுமையல் தீர்வதெப்போ றப்பே றப்பே (காயம்)

3. கள்ளமனம் துள்ளுவதால் றப்பே றப்பே நீயும்

காணாமல் மறைந்தனையோ றப்பே றப்பே

4. கெட்டபயல் என்றுதானோ றப்பே றப்பே என்னை

எவட்ட வெளிதனில் விட்டாய் றப்பே றப்பே

5. சத்தியமதாகச் கொன்னேன் றப்பே றப்பே உந்தன்

சாயுட்சப்பதி தருவாய் றப்பே றப்பே

6. அற்பதுன்யா வாழ்வு எல்லாம் றப்பே றப்பே நபி

சொற்பமென்றே யுரைத்தார் றப்பே றப்பே

7. வேறென்ற விரோதமதை றப்பே றப்பே அறுக்க

நூறாயிலங்கிடுவாய் றப்பே றப்பே

8. இல்லல்லாஹீ வென்று சொல்லி றப்பே றப்பே யகீனில்

இருப்பவர்க் கெதிராகுவாய் றப்பே றப்பே

9. தத்துவம் தனையடக்கி றப்பே றப்பே தன்னில்

தவ்ஹீது செய்வோர்கள் றப்பே றப்பே

10. வெற்றி தரும் ஞானச்சுடர் றப்பே றப்பே கண்டு

சிந்திதனைப் பெற்றிடுவார் றப்பே றப்பே (காயம்)

11. அடித்துத் துரத்தினாலும் றப்பே றப்பே உந்தன்

அண்டை விட்டகன்றுவிடேன் றப்பே றப்பே

**கீதம் 9**

(காதிர் ஹமீதொலியா என்ற மெட்டு)

ஹக்கனின் காருண்ய பீரா- காதலைத் தீரா

1. வாணாள் வீணாய்போகுதே என் வள்ளலே வான் ஜோதியே

வந்து ஆள்வதெப்போ கல்பு நொந்து வாடுதே

(ஹக்கனின்)

2. அஹதியத் தெனும் கடலில் ஆழ்ந்திருந்த ஜோதியே

வந்து ஆளவதெப்போ கல்பு நொந்து வாடுதே

(ஹக்கனின்)

3. கடைக்கண் பார்வை தன்னைக் கொண்டு காமி லானோர் கோடியே

தயக்கம் ஏனோ என்மேல் தயவு வைத்தருள்வீரே

(ஹக்கனின்)

4. ஹைதராபாதில் உதித்த ஹக்கனின் பிரகாசமே

அடிமை ஆவலானேன் அன்பாய் ஆதரிப்பீரே

(ஹக்கனின்)

5. இருதயத்திலே இருந்த குபுருதன்னை அறுத்திட்டீர்

இல்லல்லாஹுவென்றே இலங்கும் பாரென்றீர்

(ஹக்கனின்)

6. ஆசையென்னும் வாசிதன்னை நேசம் பூண்ட ஆஷிகே

அகத்தில் அருள்தருவோர் ஜகத்திலாரு மில்லையே

(ஹக்கனின்)

7. அஹ்லதீவான் அவ்லியாக்கோர் ஆணி முத்தாய் ஆனோரே

ஆசை மீறுதே என்னை அணைத்துச் சேர்ப்பீரே

(ஹக்கனின்)

**கீதம் 10**

(ஆனந்த ஞானப்பெருமைக் கண்Nணு என்ற மெட்டு)

அஹதியத்தென்ற அடங்காப் பொருள் நீயே

வஹ்தத்து என்று தொகுப்போடு நின்றாயே

வாஹிதிய்யத்தென்று வகுப்புட னின்றாயே

ஆலம் அருவாஹில் ஜோதியா னின்றாயே

ஆலம் மிதாலினில் கோலமுமானாயே

ஆலம் அஜ்ஸாமில் அடங்கி மறைந்தாயே

ஆலம் இன்ஸானிலே ஜாமிவுமானாயே

சித்தர்கள் தேடிய திரவிய முனீயே

நித்திய ஆனந்த நேசனுமே நீயே

காதலித்தோர் காணும் காட்சிப் பொருள் நீயே

ஏழுவகை தோற்றத்தில் வாழும் பொருள் நீயே

மாளாமல் மாண்டோர்க்கு தோற்றும் பொருள் நீயே.

**கீதம் 11**

(லாயிலாஹ இல்லல்லாஹூ என்ற மெட்டு)

1. பாவியைக் கண்பாரும் தாதா பாத்திபா காதிரொலி

காதலா னேன் காண்பதெப்போ கருணை செய் காதிரொலி (பாவி)

2. அல்லும் பகலும் தொல்லுலகில் ஆழ்ந்திருந்த பாவியின்

கல்பினில் கருளகற்றும் காதிரே ஆரிபொலி (பாவி)

3. தூருஸீனா மலைதனிலே மூசா வசனித்ததின்

சூட்சந்தன்னை காட்சி செய்யும் ஸூபி காதிரேவொலி (பாவி)

4. அனல்ஹக்கு என்றுரைத்த ஆஷிகான ஹல்லாஜியின'

அந்தரங்கம் தன்னிலுறைய ஆட்சிசெய் காதிரொலி (பாவி)

5. ஆரிபான அபூயஜீது மாண்டுபோன எறும்பதில்

ஊதியதால் உயிர்பிறந்த உண்மை தாருமே வொலி (பாவி)

6. ஷெய்கு ஸாபிறு மலையில் தியானம் செய்யும் போதினில்

சீஷனபயக் குரலைக்கேட்ட ஸிர்ரை தாருமே

7. கதுரத்தை வஹ்தத்திலும் வஹ்தத்தை கதுரத்திலும்

கண்டு மோட்சம் பெறுவதற்கு காட்சி தாருமே வொலி (பாவி)

8. இரவு பகலாய் ஏழைமனது லைலா தன்னைத் தேடவும்

வரமருள வேண்டுபெங்கள் வள்ளலே காதிரொலி (பாவி)

**கீதம் 12**

(காப் ஹா ஜன் ஸாத் ஆனவா என்ற மெட்டு)

அலிபுலாம் மீமானவா எங்கள் ஜன்ஸீன் காபுமானவா

1. முச்சுடராகிய தீரா இச்சையுடனே முகம் பாரா

முத்திவருவதுமெப்பவோ நான் சித்தி பெறுவதுமெப்பவோ

2. ஆலமது பிறந்தவித்தா அகத்தினிலே மறைந்த முத்தா

இல்லல்லாஹு வென்றேயிருந்து நான் இரண்டறக் கலப்பதுமெப்பவோ

3. அஹ்துவுஹதாயிருந்தாயே ஆலம் அர்வா ஹாய்ப் பிரிந்தாயே

காப கவ்ஸைனி வெளியானவா எங்கள் கல்புதனில் ஒளிவானவா

4. தன்ஸீஹுவாய் தனித்தாயே தஸ்பீஹுமாய் சமைந்தாயே

வேறுதனைவிட்ட வேதியர் தம்மில் ரூஹுல் குத்ஸியுமானவா

5. தன்னிலே தானிருந்த தாத்தோனை அஸ்மா ஸிபாத்திகில் பார்க்க

ஆலமடங்கலாய் அமைந்தவா நீயும் அன்பர் களுள்ளத்திலானவா

6. சித்தர்கள் தேடிய தீரா திகைத்திடும் ஏழையைப் பாரா

கத்தியழுகிறேன் காதலைத் தீர்த்திடும் ஹக்கனே கருணைசெய் காதிரா

7. ஆஷிகீன்களை அணைத்தாயே என்னை ஆகாதென்றே கழித்தாயே

நித்தியானந்த நேசர்களில் என்னை நியமனம் செய்யவுமாகாதா.

**கீதம் 13**

(நாடு செழிக்க மாந்தர் என்ற மெட்டு)

1. ஆதி இறைவனை ஆசை வைத்தால் நமக்
கான கருமங்கள் கைகூடுமெனவே ஜோதியிலங்குமந்த வீதியிலே சென்று
காதலுடனே தெளிந்தாடு மயிலே
புகழ்ந்தாடு மயிலே உணர்ந்தாடு மயிலே

2. இக்க அவ்வலதீனின் மஃரிபதுல்லாஹி
என்று நபியவர்கள் சொன்ன மொழியே
முன்னோனை அறிவதே மார்க்மதில்
துவர்க்மென்றே உணர்ந்தாடு மயிலே

தெளிந் - மகிழ்ந்

3. வல்லோன் தனையறியும் வல்லவர்கள் தங்கள்
வகைகளை இன்னதென்றறிந்து கொண்டால்
அல்லா வொருவனையே அறிந்திடலாமென்று
ஆரீபுPன்கள் சொன்னதென்றாடு மயிலே

புகழ்ந் - உணர்ந்

4. தன்னை அறிவதென்றால் தசை தோல் எலும்பதை
அறிவது இல்லை எனவே
உன்னை ஆட்டி அடங்கிடும் ஆத்துமாவின் ஸிர்ரை
அறிந்து தெளிவதென்றாடு மயிலே

புகழ்ந் - உணர்ந்

5. அல்இன்ஸானு ஸிர்ரீ என்று அகமகிழ்ந்தே
பின்னால் அனஸிர்ருஹு என்று உணர்ந்தே

கடலுமலையுமொன்றாய் கண்டுகொண்டே நீயும்

காதலுடனே தெளிந்தாடு மயிலே

புகழ்ந் - உணர்ந்

6. ஊத்தைச் சடலமதை உண்மையென்றே இலவை

காத்த கிளிபோல மாந்தேங்காமலே

கூட்டிலடைத்திருக்கும் குறிப்பறிந்தே

இல்லாஹுவென்றே உணர்ந்தாடு மயிலே

புகழ்ந் - உணர்ந்

7. தனியோனைச் சார்ந்திடவும் தாரணியிலொரு

தந்திரம் சொல்கிறேன் ஷக்கறவே

நீயெனும் நினைவுதன்னை நீக்கிவிட்டு சுக

நிஷ்டையிலிருப்ப தென்றாடு மயிலே

புகழ்ந் - உணர்ந்

**கீதம் 14**

(ஆதி ஹக்கள் தாதரான என்ற மெட்டு)

1. ஆதி ஹக்கன் அன்பரான ஆஷிகாய் வந்த காதிரா

ஆதியறியாப் பாவிகட்கோர் ஜோதியாய் வந்த காதிரா

இருதயந்தனி லிருளகற்றிடும் ஏந்தலே தாதா

என்முகம் பார்த்திட வாதா

2. ஏழைக்கிரங்கித் தாழைத் தாரும் வேளைக்குதவும் காதிரா

பாவிக்கிரங்கி தாவிக் கையைத் தாரு மெங்கள் காதிரா

உலையிலிட்ட மெழுகதைப்போல் உருகுதே நாதா

என்மனம் கருகுதே வேதா

3. காட்சி தந்து மீட்சிசெய்யும் காமிலானகாதிரா

தீட்சைதந்து தீதகற்றும் திங்களாய் வந்த காதிரா

பாரினிலிந்த பாவிபடும் துயர்பார்த்திடும் தாதா

நேரில் காத்திடும் நீதா

4. காய இருளது மனதிலுறைவதை மாற்றிவைப்பீர் காதிரே

காயாபுரியது கையிலகப்பட கருணை செய்வீர் காதிரா

கன்றிழந்திடும் காலியதுபோல் கதறுதே தாதா

என் மனம் பதறுதே மாதா

5. ஆதி இறையோன் ஆசை தன்னை ஆட்சி கொண்ட காதிரா

அகத்தினிருளை அகற்றி இஷ்கையருள்வீரெங்கள் காதிரா

கலபு குருடாக இருந்தால் காண்பேனோ தாதா

ஹக்கனைப் பார்பேனோ வேதா

6. அகத்துக் கண்ணை திறக்கச் செய்வீர் அண்ணலே எங்கள் காதிரா

சகத்திலெம்மைக் கார்ப்பதுங்கள் கடமையே எங்கள் காதிரா

கையைக் கொடுத்துக் கார்க்காவிட்டால் கார்ப்போர் யார் தாதா

என் முகம் பார்ப்போர் யார் வேதா

7. கள்ள மனதின் கறளை நீக்கி காட்சி அளித்திடும் காதிரா

தௌ;ளிய வான் சோதி தன்னை திறந்து தந்திடும் காதிரா

தாரணிதனில் தட்டழிகிறேன் தாபரிப்பீர் தாதா

எப்Nபுhது காண்பேனோ வேதா

(ஆதி ஹக்கன் அன்பரான)

**கீதம் 15**

(ஞானப் பண்டிதரான் என்ற மெட்டு)

1. ஷம்ஸிய்யா பாதிலுதித்த சிங்காரா- சற்குண மெய்ப்பீரா (ஷம்ஸிய்யா)

ஆதி இறையவனின் அருள்வேதா- அகந்தனிலே அருள் தந்திடவாதா

சாதி மல்லிகை மலர்ப் பொற் பாதா- சற்குண மெய்ப்பீரா

2. அவுலியாக்களின் அன்புறு சீலா-அஹதவனடிதனிலே மடி பாலா

அவனிதனை அரசாண்ட செங்போலா- சற்குண மெய்ப்பீரா

3. ஹக்குல் யகீனதில் சொக்கிடும் கண்யா- கவலை

அகற்றி என்னைக் காத்திடும் புண்யா

ஹக்கன் ஹளரத்தைக் காட்டிடும் தூயா- சற்குண மெய்ப்பீரா

4. வல்லோனைத் தேடிNயு வந்திடும் வேளை- மனது

இரங்கியே தந்தீர்கள் தானை

தவனமே றாங்கள் தீர்ந்தோமே ஏழை- சற்குண மெயப்பீரா

5. மக்க னந்நபியின் மகிழ்வுறு நேசா-மதியைப் பழித்திட

வந்த பிரகாசா

புனுகு ஜவ்வாதெனப் புகழ்ந்திடும் வாசா- சற்குண மெய்ப்பீரா

6. தவத்தினிற் சிறந்த தரும மணாளா- தவ்ஹீதுக் கடலில்

ஆழ்ந்த குணாளா

வாஹிதானவனின் அருள் தோழா- சற்குண மெய்ப்பீரா

7. வல்லோனைக் கண்டு வணங்கிய வீரா-

மாந்தர்களைத் தினம் வளர்த்திடும் சீரா

எல்லை கடந்த இரகசியத் தோரா- சற்குண மெய்ப்பீரா

**கீதம் 16**

(இந்த நல்ல நேசனே என்ற மெட்டு)

1. ஆதி இறையோனே ஜோதி பெரியோனே

காட்சியளித்திட கலபிலுதிப்போனே (ஆதி)

2. நானே இழந்தால் நீயது ஏதோ

நீயே இழந்தால் நானது ஏதோ

3. கன்ஸுல் மக்பீயில் தன்ஸீஹுமானோனே

கண்ட பொருளதில் நின்று நிறைந்தோனே (ஆதி)

4. ஷம்ஷுல் ஹுவிய்யத்தாக இருந்தோனே

தாரணிதனிலே யான் கர்த்தாவுமானேனே (ஆதி)

5. நானென்றிருந்தேனே நாளும் கழிந்தேனே

தானாயிருந்த தன்மை யறியேனே (ஆதி)

6. லாஅன இல்லாஹு வென்றிராமலே

வேறெது என்ற விலங்கி லிருந்தேனே (ஆதி)

7. கற்பூர தீபா கன லொளியானோனே

முப்பாழ்முடி வினில் முன்னிலையானோனே (ஆதி)

**கீதம் 17**

(தெருவில் வராண்டி என்ற மெட்டு)

1. அணைத்துச் சேர்ப்பானோ -றப்பு-அகற்றிப் பார்ப்பானோ (அணை)

2. மஹ்பூபு தன்னிலேப்போ மாளப் போறோமோ- மாளப்போறோமோ

வாஹிதாயப் பலதைக் கண்டு வாழப் போறோமோ

வாழப் போறோமோ - ஹக்கைக் காணப் போறோமோ

3. காட்சி என்னும் தீட்சை தன்னைக் காணப் போறாமோ-

காணப் போறாமோ

காகமது போல தினம் கத்திச் சாவோமோ- கத்திச் சாவோமோ-

நாம் வெற்றியாவோமோ

4. கல்புதனில் கருளகற்றி கண்டு கொள்வோமோ கண்டு கொள்வோமோ

ஹக்கைக் காணவில்லை என்று ஏங்கி கதறியழுமோ

கதறியழுவோமோ நாம் பதறியழுவோமோ

5. வாணாள் வீணாய் போனாலினி மாறி வருமோ- மாறி வருமோ



www.sufimanzil.org

மஹ்பூபைக் காணாவிடில் மனது ஆறுமோ

மனது ஆறுமோ- மன மையல் தீருமோ

6. எட்டாப் பொருளதென்றுவிட்டுப் போவோமோ

விட்டுப்போவோமோ-நாம்

கிட்ட நெருங்கி நின்று கட்டிச் சேர்வோமோ

கட்டிச் சேர்வோமோ- நாம் எட்டி வீழ்வோமோ

7. நன்மை தீமை என்று மனம் நாடிருப்போமோ நாடிருப்போமோ

தினம் நயனத்திடை ஷைகு தன்னை நாடிருப்போமோ

நாடிருப்போமோ- தினம் தேடிருப்போமோ

8. லாமவ்ஜூத இல்லல்லாஹு வென்றிருப்போமோ

தினம் நானென்ற பெருந்தொடக்கை பூண்டிருப்போமோ

பூண்டிருப்போமோ அதை பூண்டறுப்போமோ

**கீதம் 18**

(கண்ட துண்டோ என்ற மெட்டு)

1. ஆரிபீன்களின் கணத்தில் அணைந்து சேர்வோமோ

நாம் வேறெதென்ற அக்கினியில் வெந்து வீழ்வோமோ

கண்டிடுவோம் சச்சிதானந்த வெற்றியே

காப கவ்ஸைனி தன்னிற் கண்டு சொக்கியே

காதலுடன் காட்சி லிகா காணும் முற்றியே

2. கண்ட பொருளத்தனையும் நின்ற நிராமயமதாய்

நினைவுதனை நிறுத்தியே நோக்கி

வட்ட வடிவமான சுழிமுனை என்ற மத்தியில்

மகிழ்வுட னிஸ்மை தாக்கி

தன்னிலையை தானறிந்து தவத்தினில் சேரு

நாம் முன்னிருந்த முச்சுடரில் முங்கினோம் பாரு

கோலங் குறிப்பென்பதெல்லாம் குதாவின் ளுஹூரு

குவலயத்தை வேறுகண்டால் கூடுமோ தவ்ஹீது

3. பஞ்சென்றும் நூலென்றும் பல உடைகளென்றும் நீ பார்த்திருக்காய்

அஞ்சாமல் ஆழ்ந்ததில் பஞ்சை அன்றி அமைந்திருக்கா

உன்னிலே உதித்தெழுந்த ஸிபத்தீனைப் பாரு

உறங்கினால் ஒழிந்த இடம் உண்மையில் தேடு

விழித்தபோது எங்கிருந்து மீளுது கூறு

விபரமறிந்தால் மவுத்தை அறியலாம் நேரு

4. சூரியனது உதித்தால் துலங்கும் பிரகாசமது

மேகமதுவே மறைத்தால் சூரியனுமில்லையாமோ

இபுறாஹீம் நபியவர்கள் மகனை அறுத்ததுவே

இரகசியமதுNவு அன்னியத்தை அறுத்ததுவே

மூசாநபி நேசமுடன் மரந்தனிற் பார்த்ததுவே

சூட்சமது தன்னபுஸில் காட்சியளித்ததுவே

5. நானென்றம் நீயென்றும் நடுவென்றும் கண்டு நாடுவதை

ஆடுவதும் அசைவதும் அனைத்துமே அவனென்றறிந்துக் கொள்

மாங்காயினுள் வண்டதுபோல் மஹ்பூ பிலடங்கு

மர்தபதுல் அஹதிய்யாவில் மௌன முடனொடுங்கு

நானென்ற நினைவு தன்னை னோனென்றதிலடக்கு

ஹூவென்ற ஹுவிய்யத்தில் குல்லுன் னபீ யாக்கு.

**கீதம் 19**

(வள்ளிக் கணவன் பெயரை என்ற மெட்டு)

1. அஹதுஹது வாஹிதுவுல் ஆருமறியாதிருந்து

ஆலம் அருவாஹானதில் மனமே ஜோதியாய் நின்றதுவே

மனமே ஜோதியாய் நின்றதுவே

2. ஏழா மர்தபாவில் வாழும் இன்ஸானதுவும்

ஆதிமர்தபாவில் - மனமே- அமைந்து இருந்ததுவே

மனமே – அமைந்து இருந்ததுவே

3. நெல்லை நிலந்தனிலே நிறப்பமுடன் விதைத்தால்

கொள்ளும் பொருளதுவம் மனமே

நெல்லதை யன்றி உண்டோ (மனமே)

4. குல்ஹுவல்லாஹு வென்று குறித்த ரகசியத்தில்

இன்ஸானுடைய ஸிர்ரை மனமே

இன்பமுடனே யறிவாய் (மனமே)

5. ஆதியனாதி தனில் ஆருமறியாதிருந்து

ஆதமதில் மறைந்து – மனமே

ஆலமதில் வந்தது யார் (மனமே)

6. ஆழி அலைதனிலே அலையும் துரும்பது போல்

மேதினி மேல் அலைந்தால்- மனமே

மெஞ்ஞானம் தான் வருமோ (மனமே)

7. அஸ்மா ஸிபாத்துவுடன் ஆலமதை மறந்து

ஷம்ஸுல் ஹுவிய்யாவிலே மனமே

தனித்துத் தரி படுவாய் (மனமே)

**கீதம் 20**

(மங்காத மாட்சி தங்கும் நாகூர் என்ற மெட்டு)

1. எங்கும் நிறைந்திலங்கி தங்கி தனித்த தயாளா

என்னில் தங்கி நீ ஆளாய்



www.sufimanzil.org

2. ஏங்கி கவலை கொண்டேன் என் முகம் பாரும்

அன்பு கொண்டகம் பாரும்

ஏழை முகம் பார்த்திரங்காதேனோ

நான் பாவியே தேடியலைவேனோ மேவியே ( எங்கும்)

3. எத்தனையோ கெஞ்சியிமென் மேல் இரக்கமில்லையா

கல்பின் கறளகற்றவில்லையா

சுத்தத் திருவடியில் சொக்கிடவுமாகாதா

கர்த்தனே காதிரா

4. அஃயானு தாபிதாவிலே ஆகாதிருந்தேனோ

அதனாலே யான் சீதேவியாகேனோ

வேற்றுமை கொண்டே இருந்த வீணாள் போதாதா

யான் சேர்ந்திடலாகாதா (எங்கும்)

5. உள்ளதுரியதெல்லாம் ஒளியா துரைத்தேனே

என்னில் வெளியாகு கர்த்தனே

அஸ்மா ஸிபாத்தின் மள்ஹராம் ஆலமும் நீயே

எல்லாக் கோலமும் நீயே ( எங்கும்)

6. மறைபொருளைக் காணவே மையலே கொண்டேன்

இந்தப் பையலே விண்டேன்

பாங்காய் எனக்குதவி பார்தனில் யார் தானுண்டோ என்னைப் பார்ப்பாருண்டோ (எங்கும்)

**கீதம் 21**

(திவ்விய தரிசனம் தரலாகாதா என்ற மெட்டு)

உன்னில் ஹக்கனை காணலாகாதா- எந்தன் கல்பே நீ (உன்னில்)

2. கானலை நீரென்று கருதிNயு காடைபோல்

கலங்கித் தவித்திடுவாயோ (உன்னில்)

3. உலகை மறந்து நீ உன்னிலுணர்ந்தே

ஹூவென்ற ரகசியம் பாரு

வல்லவன் தாத்தின் ஸிபாத்தின் ரகசிய

வகைதனை யறிந்திடுவாயே (உன்னில்)

4. பாங்குடன் நகைகள் பலவிதமானால்

தங்கமே யன்றி வேறாமோ

தன்ஸீஹும் தஷ்பீஹும் தானேயறிந்தால

தங்கமும் நகையும் போலாமே (உன்னில்)

5. ஏழு ஸிபாத்து எங்கேயிருந்து

இலங்குது என்று நீ பாரு

வாழுமிருதய நூறிலிருந்த

வகைதனை அறிந்திடுவாயே (உன்னில்)

6. ஆதமுதனிலே அமைந்து யிருந்த

அற்புதமானவோர் வந்து ஸுஜுதிட

வல்லோனும் வாக்களித்தானே (உன்னில்)

7. ஹக்கனின் கருணை கல்பிலிருக்க

கானக நிலவு போலானாய்

ஹக்குள் யகீனில் கலச்தே இருந்தால்

காதிரைக் கண்டுகொள்வாயே (உன்னில்)

8. ஆரிபுவான அபூயஸீதவர்க்கே

அதியும் வாக்களித்தானே

நீ என்ற நபுஸை நீக்கிய பின்னே

நேரினில் வாரு மென்றானே (உன்னில்)

9. முன்னிரு விழியின் நடுவிலே தானே

முர்ஷிதை முன்னிலே நோக்கி

தன்னை மறந்துத் தலமு மறந்தே

தாவி நீ சோதியிற் சேரே (உன்னில்)

**கீதம் 22**

(காலிகுமே நூர் என்ற மெட்டு)

1. ஷம்ஸிய்யா பாதா சற்குண வேதா

சமயமே என்முகம் பார்த்திடும் நீதா (ஷம்)

2. கன்ஸூல் மக்பியாய்க் காணும் மெய்ப்பீரா

கல்பு தெளிந்திட கருணை செய் நேரா (ஷம்)

3. ஹக்கனைக் காணவே காதலே இல்லா

தன்னெஞ் சனானேனே காலமே எல்லா

தாரணி தனிலெனக் கார் துணை நாதா

தருணத்திலென்முகம் பார்த்திடும் நீதா (ஷம்)

4. ஈஸா நபியவர்கள் இன்பமாய் விண்ட

ஆலம் மல கூத்திலே ஆவலாய் சென்ற

ஏழு மகாம்களை இணைத்திடும் நூறு

ஏழை இருதயத் திலிருப்பதும் வேறு (ஷம்)

5. ஆரிபீன்களுக் கெல்லாம் அண்ணலாய் நின்ற

அஹதவன் இஷ்கையே ஆவலே சொண்ட

கல்பின் கறளதைக் கழற்ற லாகாதா

கஷ்டமெடுத்த நாள் அதுவும் போதாதா (ஷம்)

6. மூன்று பனாக்களில் முங்கியே சென்றீர்

முர்ஷி தீன் வழிகளில் முந்தியே நின்றீர்

பாவிபடும் துயர்பார்த்திடும் நாதா

ஆவியழியு முன்னே அனைத்திடும் நீதா (ஷம்)

7. நயனத்திடை தனிலே நண்பர்கள் கண்ட

பயனெட்டிடவுமே பாவியே விண்ட

ஆதியின் ஆசையை அளித்திடும் வேதா

காதிரெனும் பேரான நன்னீதா (ஷம்)

**கீதம் 23**

(சொரிந்தது பாரும் என்ற மெட்டு)

1. காட்சியது தோணும் உந்தன்

கல்பிலிருக்கும் கறளதை நீக்கிடில் (காட்சி)

2. சூட்சமறிந்து சுகம் பெறுவோர்களே

தீட்சையுடனே தியானமே செய்திடில் (காட்சி)

3. நானென்று சொல்வதையே – பார்த்து

வீணென்று சொல்லி விளங்கிக் கழித்தபின் (காட்சி)

தானவனான தஜல்லிய்யாத்தா மென்று

சாகாமல் செத்தசவம் போலிருக்கையில் (காட்சி)

4. ஓங்காரக் கம்பமதில்- உள்ளே

உலாவிய உத்தமியான சிரோன்மணி (ஓங்)

தூங்காமல் தூங்கி சுகம் பெறும் வேளையில் (காட்சி)

5. முத்தொடு பச்சையுமாம்-அந்த

சித்திரமாக சிறந்திடும் மாளிகை

கத்தனொளிவு கலந்து சொரிந்திட

கைமணியோசை கணீரென் றசைந்திட(காட்சி)

6. இல்லல்லாஹு வென்றே நீயும்

இன்பமுடனேயே யகீனிலிருந்திட

வல்லோனொளி தரும் கல்பதை நோக்கியே

சொல்லது வன்றி ஷுஹூதது செய்திட (காட்சி)

7. முச்சந்தி வீதியிலே-சென்று

இச்சையுடனே இருக்கும் பொருளதை((முச்)

நிச்சயமாக நினைவில் நிறுத்திட

பச்சையுடனே பவளமும் தோன்றிட(காட்சி)

**கீதம் 24**

(எங்கும் நிறைந்தாயே என்ற மெட்டு)

1. எங்கும் நிறைந்தோனே எனைவிட்டேனோ மறைத்தாயோ

எங்கே உனை நான் தேடி அலைவேனோ (எங்கும்)

2. எப்பொருளினும் தானதாய் பற்பலதுமாய் தோன்றியே

ஒப்புவமையொன்றுந் தோன்றாத என் நேசனே (எங்கும்)

3. அலஸ்து பிறப்பிகுமென்றபோது காலூ பலாவென்றேனே

ஞாலமீதில் ஏனோ மறந்தேன் என் நேசனே (எங்கும்)

4. என்னினைவிலு முன்னையே எண்ணிடாக் குறைதானதோ

என்னைவிட்டும் எங்கே மறைந்தாயென் நேசனே(எங்கும்)

5. உன்னையன்றியே வேறெந்த உதவியுமில்லை என்றே

கண்ணும் புண்ணாய் கரைந்து நொந்தேனே என் நேசனே (எங்கும்)

6. கருணை செய்வேனென்று நீ காவற்கிடங்கிலடைத்தாயே

தருணமீதிலுதாவாதது ஏனோ என் நேசனே (எங்கும்)

**கீதம் 25**

(ஆவலாய் அணைத்து சேரணும் என்ற மெட்டு)

1. தானே தன்னிலே நோக்கணும் தவத்திலிருந்து

தானே பார்க்கணும் பார்க்கணும் (தானே)

2. ஏழு மகாம்களிலே இன்பமாய் கூடுங்கோ

வாழுமிருதயத்தின் வழிலே தேடுங்கோ

சூழுமது ரூஹுமகாம் சூட்சமதையறிந்து(தானே)

3. மூன்றாம் மகாம் ஸிர்ரதுவில் முந்தியே நில்லுங்கோ

நான்காம் மகாம் கிய்யதிலே நாடியே செல்லுங்கோ

காணாத காட்சியெல்லாம் கண்டு மகிழ்ந்திருக்க (தானே)

4. ஐந்தாம் மகாமதுவும் அக்பா வென்றேயுரைப்பார்

ஆறாவது காகெளஸைனி யென்றே குறிப்பார்

விந்தையுடனே மகிழ்ந்து சிந்தையிற் தெரிந்திட (தானே)

5. சூட்சமுடன் ஏழாம் மகாம் ஸுல்தான் அஸாகிரு

சூட்சங்களை அறிந்து ஷுஹுதுதனிலே கூடு

தீட்சையுடன் ஷைகில் பனாவானதில் தியானம் செய்ய (தானே)

6. நயனத்திடை ஷைகு தன்னை நாடி யிருங்கோ

லாஅன இல்லாஹூவென்றே நாவால் மொழியுங்கோ

தவனிலையில் தனியவனில் தானெ பனாவாகிப் பார்க்க (தானே)

7. வாய்ஞானம் பேசியதாய் வாய்க்காதொரு போதுமே

நோக்கியே செல்வதானால் வாய்க்கும் தெரிசனமே

மாளாமல் மாண்டு நீயும் மஹ்பூபில் சேர்ந்திருக்க(தானே)

**கீதம் 26**

(காதர் ஹமீதொலியா என்ற மெட்டு)

1. ஹைதராபாதொலியா ஹக்கனின் நேயா

2. மதியை யழைத்த மஹ்மூது நேசா

கதி பெற கெஞ்சினேன் நேசா

கஸ்தூரி வாசா (ஹைத)

3. அனல்ஹக்கு என்று அறைந்திட்ட வேதா

ஆவலைத் தீர்த்திடு நீதா அண்ணலே நாதா (ஹைத)

4. ஹக்குல் யகீனில் சொக்கிய வீரா

காட்சியளித்திடும் பீரா கல்பினில் நேரா (ஹைத)

5. கல்பினில் காதல் பெருகுதே வேதா

கனலாக வேகுதே நாதா கைதாரும் நீதா (ஹைத)

6. ஆசை ரபுரபில் ஏறிய வேதா

அடிமைக்கிரங்கிடும் நீதா அண்ணலே நாதா (ஹைத)

7. வாணாளும் வீணாய் போகுதே வேதா

வராதேனோ நீதா நான் வம்பனோ நாதா (ஹைத)

8. ஏழையே கெஞ்சி இயம்பினேன் வேதா

தாழைத் தந்தாளும் நீதா தருணமே நாதா (ஹைத)

**கீதம் 27**

(ஐயா சிறுவன் ஏழை என்ற மெட்டு)

1. ஐயா சிறுவன் ஏழை என்னை ஆதரிக்காயா ரப்பே

அகந்தனிலே அருள்புகட்டி தாபரிக்காயா

என்னைத்தா னணைக்காயா (ஐயா)

2. தந்தை தாயும் தானெனவே தாவி வந்தேனே

என்னை தாபரிப்பாய் என்று நம்பி மேவி வந்தேனே

காதலித்து வந்தவனை காத்தலாகாதா – ரப்பே

கல்புதனில் கருளகற்றி தேற்றலாகாதா

நான் தீங்கனோ நீதா (ஐயா)

3. லாஇலாஹ இல்லல்லாஹுவென்று ரையேனே கல்பில்

லாஷைய இல்லாஹு வென்றுணரேனே

இல்லல்லாஹு என்று எனை மறந்திருக்கேனே – ரப்பே

ஏழைமுகம் பார்த்திரங்க நேரம் வராதா

கல்பில் காதல் வராதா (ஐயா)

4. இருதயமே எனக்குடைய தென்றறைந்தாயே அதில்

இருளகற்றி யருள் தருவே னெனப் பகர்ந்தாயே

கல்புதனிற் கலக்கமென்றே கழித்து விட்டாயா றப்பே

கன்னெஞ்சனென்று என்னை பழித்துவிட்டாயா

நீயே ஒளித்து விட்டாயா (ஐயா)

5. என்ன குற்றமென்றறியேன் என் தம்பிரானே

என்னில் ஏழுஸிபத்தெனக்குடைய தென்பதோ கோனே

உன்னயைன்றி ஒன்றுமில்லை என்றிடுவேனே றப்பே

ஒதுங்குமெனக் கையணைக்கக் கருணை வராதா

என்மேல் கசப்பேனோ நாதா (ஐயா)

6. ஆலை வாயிலிட்ட கரும்பாக்கி விட்டாயே நான்

அலைக்கழிவதனையும் நீ பார்த்திருக்காயே

கொல்லனுலை போல உளங்கொதிக்குதே கோனே

எப்போ இல்லல்லாஹு என்று என்னை மறந்திடுவேனோ

உன்னைத் தெரிந்திடுவேனா (ஐயா)

**கீதம் 28**

(ஆவோ ஆவோ முஸ்லிம் லீக்கே என்ற மெட்டு)



www.sufimanzil.org

வாரும் வாருமிருதயத்திலேகியே செல்வோம் (வாரும்)

2. ஸாஹிபு இன்ஸான் காமிலு சொன்ன சங்கதியறியாயோ

காமிலின் கல்பு ஹக்கனின் சிம்மாசனமது வென்ற

சங்கதி யறியாயோ (வாரும்)

3. பைத்துல் மஃமூரதுவே என்று மன்னவர் சொன்னாரே

துய்யவன் தன்னை ஷுஹூது செய்து

வையகந்தனிலே மகிழ்வுடனிருக்க (வாரும்)

4. மூஸா நபியும்ல முந்தியே சொன்னாரே

ஆசையுடனே அகந்தனிலிருந்து

அனல்லாஹ்வென்ற அகமியமறிந்து (வாரும்)

5. அல்லாஹ் அல்லாஹ் என்று அனுதினம் அகந்தனிலே தாக்கு

வில்லன் இபுலீஸின் வீரியம் குன்றி

தொல்லுலகாசை தூரமுமாகிவிடும் (வாரும்)

6. உற்று உணர்ந்து உன்னிலே பார்த்தால் ஒன்றுமே உனக்கில்லை

கூற்றுவன் கையிலாயுதம் போல

குருவைத் துடர்ந்து தியானத்திலிருந்திட (வாரும்)

7. பாவத்தில் பெரிது யாதென்று கேட்கப் பாரினிலே விண்டார்

நீயென்ற எண்ணம் நினைவிருந்தால்

நிகரில்லை வெறெந்த பாவமுமென்றே (வாரும்)

**கீதம் 29**

(கொஞ்சுமா மயிலன்னமே என்ற மெட்டு)

அஞ்சிடாமலே மனமே ஆதியைத் தேடு தினமே (அஞ்சி)

2. அறிவுகளத்தனையும் அடக்கி அகத்தில் நோக்க

சோதி வந்திடு மனமே ஷுஹூது செய் தினமே (அஞ்சி)

3. ஆனந்த முகமகத்தில் அனலாய் கொதித் தெழும்பும்

காட்சி பொருளும் மனமே கல்பில் வெளியாம் தினமே (அஞ்சி)

4. அஹதிய்யத் தெனும் கடலாய் அனைத்தையும் அழித்துவிடு

ஆலமெங்குமே மனமே அஹதினொளியாந்தினமே (அஞ்சி)

5. இன்ஸானெனும் கண்ணாடியில் ஏகன் வெளியாகிவர

தன்னினைவுதான் மனமே தறித்திடுவாய் தினமே (அஞ்சி)

6. லாஅன இல்லல்லாஹுவென்று நாள்தோறும் நாடிவர

நானெனும் திரைமனமே நழுவிவிடும் தினமே(அஞ்சி)

**கீதம் 30**

(கண்டேன் ஆசை கொண்டேன் என்ற மெட்டு)

1. கண்பார்த்திரலங்கலாகாதா கல்பில் கவலை நீக்கிடலாகாதா (கண்)

2. எத்தனை பாவங்கள் செய்தும் ஏங்கியழுதே நின்றால்

அத்தனை முழுமையும் தானே நீ அபுவு செய்திடுவாயே (கண்)

3. கத்தனே கத்தனே என்று நான் கலங்கி யழுவதைப் பாரு

நித்தமுமே நினையாத எந்தன் குற்றம் பொறுத்திடுவாயே (கண்)

4. பெண்ணாசை பொருளாசை மண்ணாசை தனிலே என்றும்

கன்னியிற் விட்டாகிடாமல் என்னைக் காத்தருள் புரிவாயே (கண்)

5. கல்பின் வழியே சென்று உனைக் கண்டு கொள்வோமென்று

காதலுடனே வந்தேனென்னைக் கையணைத்திடுவாயே (கண்)

6. என்னிலே தானிருந்தே இலங்குவதை அறியாமல்

தன்னிலைதான் மறந்தேன் என்னைத் தாவியணைத்திடுவாயே (கண்)

7. கோலங் குறிப்பற்ற குன்ஹு தாத்தாயிருந்து

எல்லாக் கோலங் குறிப்புமானாய் என் குறை நிவர்த்திடுவாயே (கண்)

**கீதம் 31**



www.sufimanzil.org

(ஞானப்பிரகாசம் என்ற மெட்டு)

1. காதிரொலியே என்னைக் கார்த்திடுவீரே (காதிரொ)

2. பாவமே மிஞ்சி பதறினே னஞ்சி

ஏழையே செஞ்சி இயம்பினேன் பீரே (காதிரொ)

3. ஆதியைத் தேடி அலைகிறேன் வாடி

சோதியை நாடி சேர்கிறேன் பீரே (காதிரொ)

4. ஹைதராபாத்தில் கருணைப் பூங்காவில்

ஹக்கனிடத்தில் கலந்தீரே பீரே (காதிரொ)

5. தாயிழந்திடுங் கன்று தவிப்பது போல் நின்று

காதலுடனே விண்டு கதறுகிறேன் பீரே (காதிரொ)

6. நாளை மஹ்ஷரில் நாயனின் நேரில்

ஏழைகள் மீதில் இரங்குவீர் பீரே (காதிரொ)

7. அஹதிய்யத்தென்Nறு அடங்கலும் நின்றே

அகந்தனில் இன்றே ஆக்குவீர் பீரே (காதிரொ)

8. தனியவனே என்னை தள்ளியே முன்னே

வலியவன் கண்ணே வசித்தீரே பீரே (காதிரொ)

**கீதம் 32**

(சிங்கார வேலா என்ற மெட்டு)

சிங்கார சீலா சித்தமிரங்கி முகம் பாரா (சிங்)

2. தீங்களென்றே என்னை தெருவில் விடாமல்

திவ்ய தரிசனம் தா

அடிமைநேசா- அகத்தினுல்லாசா

ஆஷிகீன்களுக்கே அருள் அளித்தது போல்

அடிமையைப் பார்த்திடு நேசா (சிங்)

2. ஹூவிய்யத்தென்ற குன்ஹிலிருந்து

குறிப்புடன் வெளியானாய்

அகத்தில் பிரகாசா என்னை ஆதரி நேசா

ஜகத்தினில் உன்னையன்றியே வேறு திரவியமுண்டோ நேசா (சிங்)

3. ஹக்கனே ஹக்கனே என்று அனுதினம்

கலங்கி யழுவதைப் பாரு

தினமுமே என்னை சேரு தீங்ககற்றி முகம் பாரு

ஆதரவிழந்த அடிமையை யணைத்து அகந்தனிலே சித்தம்தா (சிங்)

5. ஆழிய வாவியிலலையடிப்பதுவும் அடியவன் பாவத்தினாலா

நான் அறிகினே நேசா என்னை ஆதரித்திடு வாசா

தாயிழந்திடும் கன்றதுபோல் தயங்குகிறேன் விசுவாசா (சிங்)

6. ரஹ்மானென்ற பெயருனக்கிருக்க நீதியோ யான் கலங்குவது

நித்தியானந்தா என்னை நேசம் செய்திடு நீதா

உள்ளதுரியதை என்னிடம் சொன்னேன்

உகந்தென்னை சேர்த்திடும் போதா(சிங்)

**கீதம் 33**

(மானிலந்தோர்க்கொரு என்ற மெட்டு)

1. மாதவத்தேர்க் கொரு மகிபராய் வந்துதித்த

மஜ்தூபரை புகழ்வோமே நாமே (மா)

2. அல்லாஹ்வை மறந்து அவனியிற் பறந்து

எல்லாம் இருள் நிறைந்து இருக்குமவ் வேளைதனில் (மா)

3. கல்பினிலிருந்து கறளது விளைந்து

ஹக்கன் தனை மறந்து காட்சி இழந்திருக்கும் போதில் (மா)

4. காதிமுன் னபியின் கதமின் வழியில்



www.sufimanzil.org

ஹக்கன் காதல் வொளியில் கல்குகளை சேர்த்து வைக்க (மா)

5. ஹகீகுல் இன்ஸானின் கருவின் நிலையில்

ஹக்கன் ரூஹுல் குதுஸில் காட்சி நிலை சேர்த்து வைக்க (மா)

6. நெற்றி நடுவில் நேரே முடிவில்

கத்தோ னொளிவின் வடிவில் நித்தம் நிலைத்திருக்க (மா)

7. தாத்ததின் சூட்சம் நயந்தரும் மோட்சம்

பார்த்திட வோச்சம் பரகதி சேர்த்து வைக்க (மா)

**கீதம் 34**

(எனதாருயிர் மோகனா என்ற மெட்டு)

1. என்னிருதய ஜோதியே தரும ஹாதியே

வாராததும் ஏனோ வந்து முகம் பாராததும் ஏனோ

மனம் பதறுதே வாராய் (என்)

2. தேடக்கிடையாத தித்திக்கும் தேன் கரும்பே

காப கவ்ஸைனியே கண்டிடும் காட்சியே

கருதினேன் வாராயோ என்னிருதயம் பாராயோ

நாம் கலந்திடுவோம் வாராய் (என்)

3. படிப்புக்கு மெட்டாத பாலமுதே தேன் கடலே

நான் காலமுழுதுமே கலங்கியழுதுமே

காதலித்தேன் வாராயோ என்

கல்பினில் சேராயோ என்னைக் கையணைத்திட வாராய் (என்)

4. பாரில் உன்னைப் போல இந்தப் பாவியும் கண்டதில்லையே

என் முச்சந்தி வீதியே முச்சுடர் ஒளியே

என் முன்னிலே வாராயோ என்னை

நன்னிலை சேராயோ நான் நம்பினேன் வாராய் (என்)



www.sufimanzil.org

5. நயனத்திடை நாட நடனம் செய்திடுவாயே

என்னிருதய ஜோதியே தரும ஹாதியே

வாராததும் ஏனோ வந்து முகம் பாராததும் ஏனோ

மனம் பதறுதே வாராய் (என்)

**கீதம் 35**

(ஆனந்தமே தரும் பூங்காவன மீதிலே என்ற மெட்டு)

1. ஆதியின் அற்புத ஜோதி ஆஷிக் வொலீ அப்துல் காதிரீ (ஆதி)

2. வேதியர் மீதி விரும்பிய ஜோதி

ஆதியின் ஆசையின் மீதிலமர்ந்த மதி அப்துல் காதிரீ (ஆதி)

3. ஹைதராபாதீ ஹக்கனின் ஜோதி

காரணம் விளங்கிய ஹாதீ காமில்வொலீ அப்துல் காதிரீ (ஆதி)

4. ஏழைகள் மீதிலிரங்கிடும் நீதி

இறையவன் வாலடி சோதியிலங்கிடும் வொலீ அப்துல் காதிரீ(ஆதி)

5. கல்பதன் மீதில் கவலையின் போதில்

கண்ணெதிரினில் வரும் ஹாதீ காமில்வொலீ அப்துல் காதிரீ(ஆதி)

6. மத்ரஸா நூரிய்யாவி னிலோதி

மஹ்பூபை நாடிடும் போதி ந்த மதி அப்துல் காதிரீ(ஆதி)

7. இருதயம் நாடி இருப்பதிற் கூடி

வருவீரே நமதூரைத் தேடி வசனத்தீர் வொலி அப்துல் காதிரீ(ஆதி)

**கீதம் 36**

(ஹையோனே அணைத்து காருமய்யா என்ற மெட்டு)

1. ஹைதராபாதொலியே காருமையா- ஐயா

கவலைகளை அகற்ற வாருமையா

2. ஷம்ஸிய்யாபாதினில் சற்குருவாகிய ஷம்ஷுல் ஹுதாவொளியே

மஃஷுகு நாயனை மறையாமல் கண்டிடும் முஹம்மத் அப்துல் காதிரொலியே

தாழினைத் தந்தென்னை சேருமையா-ஐயா (ஹைத)

3. ஆதியின் ஆசையை ஆதரவையாத அநியாயமான பாவி

வேதியர் என்ற பெயர் வீணாயெடுத்திடும் மெய்யறிவில்லாத சாவி

கல்பின் கருளகற்ற வாருமையா-ஐயா

ஹக்குல் யகீனதை தாருமையா –ஐயா (ஹைத)

4. பாதமே பாக்கியம் என்றும்மை நம்பினேன்-பரகதி சேர்வதற்கே

ஏதேது செய்வேனோ என் மனம் பதறுதே – என் கண்முன்னே நிற்க

ஆதமுமான ஸிர்ரில் யாரையா-ஐயா

அறிந்தோர்களின் வழியே நேரையா-ஐயா (ஹைத)

5. தானென்ற நினைவை தாதுல் பஹ்துவில்- தாவியே சேர்த்து வைக்க

பார்க்குந் திக்கெங்கும் பூரணமாகவே-நூரதுவே ஜொலிக்க

ரூஹுல் குதுஸின் ஸிர்ரது ஏதையா-ஐயா

ரூஹு ஹகீகத் இன்ஸான் தானையா-ஐயா (ஹைத)

6. ஆரிபீன்கள் தானும் அகந்தனில் கண்டிடும் அற்புதமான ஸிர்ரு

ஓதியே அறைந்திட்டேன் உண்மையைக் கண்டிட ஒதுங்கியே ஷெய்கில் சேரு

அல்லாஹ் முஹம்மது ஆதம் யாரையா – ஐயா

அஹதுஹது வாஹிதுவில் பாரையா –ஐயா (ஹைத)

7. அரும்  பெரும் நாயகம் அன்புடன்

விண்டதோர்- அற்புதமான சொல்லு

அனமின்னுரில்லாஹ் வகுல்லு ஷையிம் மின்னூரி என்றதின் ஸிர்ரில் நில்லு

ஹைதராபாதொலியே காருமையா-ஐயா

கவலைகளையகற்ற வாருமையா-ஐயா (ஹைத)

**கீதம் 37**

(உள் உண் உன்னை ஏமாற்றினால் என்ற மெட்டு)

1. நானெங்கே தேடியலைகுவேன் நாடாதிருப்பது நியாயமா

உன்னையன்றி வேறெதுவும் உண்டோ வெந்தன் யாரஹீமே

அல்லாஹ் அல்லாஹ் அல்லாஹ் அல்லாஹ்

அல்லாஹ் அல்லாஹ் அல்லாஹ் அல்லாஹ்

2. உலகின் ஆசையும் பயனில்லை கந்தையை அணிந்தும் பயனில்லை

அதனால் கவனித்து உன்னில் நோக்கணும்

காட்சிகள் தெரிந்திடம் பார்க்கணும் (அல்லாஹ்)

3. உன்னையே தேடியலைந்தேன் உகந்தென்னைச் சேர்க்கவுமாகாதா

உன்னையன்றி வேறெதுவும் உண்டோவெந்தன் யாரஹீமே (அல்லாஹ்)

4. நானென்ற எண்ணமதை நாசமாக்குவதும் உபாயமே

இருதயமதனை நாடணும் இருக்கும் பொருளதை; தேடணும்

நாயனைக் காணவும் வேணுமே நற்கதி பெறவும் வேணுமே

காமிலைச் சேரவும் வேணுமே கல்பில் காட்சிகள் தோணுமே

அதனால்-நயனத்திடை தனில் நோக்கணும்

நானென்பதை நீக்கிப் பார்க்கணும் (அல்லாஹ்)

**கீதம் 38**

(ஏழைக்கு ஏது இன்பம் என்ற மெட்டு)

1. இறைவனை அறிவது இன்பம் அதனை

இழந்தவர்க்கே பெரும் துன்பம் துன்பம் (இறை)

2. தன்னை அறிந்ததாலல்லவோ றப்பை அறிவோமென்று

உன்னை அறிவதற்குவப்புடனே துணிந்து

ஒதுங்கி பீரிடம் சேரே பணிந்து (இறை)

3. வாஸிலான பேர்கள் தன்னை நேசமுடனேயடைந்தால்

காசினியில் வொலியாமே

தேசமதிலே அவர்கள் சீர்பாதமே பணிந்தால்

வாசமுடன் ஜெயமே பாரில் (இறை)

4. வேற்றுமைகளால் ஓதும் வீண் முஷ்ரிகீன்கள் தானும்

தூற்றுவதும் நஜீஸாமே

ஓதும் வேதமதிலே ரஹ்மான் விதித்த மொழியுணர்ந்து

ஜோதிதனில் கூடுவோமே தினம் (இறை)

5. அல்லும் பகலும் அகத்தில் அல்லாஹ்

அல்லாஹ்வென்று அருந்தவும் புரிவோமே

நேரில் செல்லரிதாயிலங்கும் சூட்சங்களைக் கண்டு தினம்

சுகவாரி யடை வோமே நம்மில் (இறை)

**கீதம் 39**

(பூரண ஜோதி ரூபமாய் என்ற மெட்டு)

ஆதமியான ரூபமாய் அவனியில் வந்த தாரையா

அஹ்து வுஹதுவானதாய் அல்லாஹ் முஹம்மது தாமையா (ஆதமி)

2. கன்ஸூல் மக்பியாவிலே தன்ஸீஹிய்யாnனும் தாத்திலே

ஹுவிய்யத்தான வுஜூதிலே குறிப்பா யெழுந்தது ஏதையா (ஆதமி)

3. அவ்வலுத்தீன் மஅரிபாவென்றே ஆலம் நபியறைந்தாரென்றே

கோலமதில் குறிப்பானின்றே குதாவின் ரகசியம் பாரையா (ஆதமி)

4. பைளுல் அக்தஸுவானதும் பைளுல் முகத்தஸுவானதும்

தாத்து ஸிபாத்துகளானதும் ரகசியம் உன்னில் பாரையா (ஆதமி)

5. தன்னிலே தானே தேடிய nனித்தே இருந்தே நாடியே

மஹ்பூபில் மனம் வாடியே மாளாமல் மாண்டிடுவீரையா (ஆதமி)

6. முச்சுடரான வீதியே முங்கியிருந்தோமனாதியே

குன்னென்றெழுந்தது ஜோதியே குறிப்பை யறிந்திடு வீரையா (ஆதமி)

**கீதம் 40**

(ஒ மாயா பிரேமை என்ற மெட்டு)

ஓ...காயமே நிலை நில்லாது

ஏழையின் காதலைத் தீருமையா... ஐயா... தாழினைத்

மந்தென்னை சேருமையா

பாழா முன்னமே பாருமையா (ஓ...காயமே)

2. ஆதியின் ஆசைவிட்டு அனியாயமாகுமுன்னே

சோதியின் காதல் தொட்டு சுகவாரியமிர்த முண்ண

உடலுயிர் பொருள்கள்யாவும் உமக்கேதான் சொந்தமாகும்

கடலது போன்ற கண்ணே கார்ப்பதும் கடமையாகும் (ஓ...காயமே)

3. பெண்டிரும் பிள்ளைகுட்டி பிரிந்திடா பிதா மாதாவும்

கொண்டிடும் பொருள்கள் யாவும் கூடவே வராமலேகும்

அண்டி வந்தணைந்தேன் பாரில் யாருமே எனக்கு இல்லை

கண்டிதங் கருணை கூர்ந்து காதினில் கேளும் சொல்லை (ஓ...காயமே)

4. ஸாலிக்கு ஒருவர் தானும் சாயுட்ச பதியைச் சேர

ஆரிபாம் அபூயஸிதை அன்புடன் கேட்கநேரே

நானுமே அபூயஸிதை நாடியே தேடிப்பார்க்க

காணாமற் போனானென்றே கவலையாயிருந்து நோக்க (ஓ...காயமே)

5. ஆதியின் ஆசை தன்னில் அனுதினம் ஆழ்ந்து நோக்கி

அமாவெனும் மர்த்தபாவில் ஆராய்ந்து பலதை நோக்கி

காமிலாயுலக மீதில் ஹைதராபாத்தில் வசித்து

ஆரிபானோர்க்கெல்லாம் அண்ணலாம் வந்த முத்து

**கீதம் 41**

(ஆடுவோமே பள்ளு பாடுவோமே என்ற மெட்டு)

காணுவோமே எப்போ காணுவோமோ

ஹைதராபாதொலியை கண்டகமகிழ்திட (காணு)

2. ஹக்குல் யகீனதில் கலந்தவரே நாம்

கண்டால் கவலை நீக்கிக் காத்திடுபவரே

குவலயந்தனில் நாம் கூடுவோமோ தினம்

ஹூவென்றலறி முகம் வாடுவோமோ (காணு)

3. காபகௌஸைன் வழியைக் காட்டுவரவரே நம்

கல்பின் கறளதை ஓட்டுவரவரே

நேத்திரம் னடுவினில் நினைப்போமோ கல்பில்

தோத்திரமின்றி சுகமிழப்போமோ (காணு)

4. மதக்கிரும் மதுக்கூரும் ஒன்றதேயாகும் திரு

ரகசியம் தனையே தருபவராகும்

சாயுட்ச பதியடையச் சேர்வோமோ அல்ல

சஞ்சலமதில் சிடந்தே சாவோமோ (காணு)

5. மகுஅது ஸிதுக்கெனும் மஹ்ளதை நாடி நாம்

மாளாமல் மாண்டிடும் வழிதனைத் தேடி

காட்சி கொண்டே வெற்றியடைவோமோ அல்ல

தீட்சை யிழந்து தினம் திரிவோமெ (காணு)

**கீதம் 42**

(சோலை அழகினில் என்ற மெட்டு)

பளிங்கு மேடையில் பதுங்கியோரன்னமே

பாய்ந்து விளையாடுதே (பளிங்கு)

2. ஆனந்தமுடனே யணைந்திட நாடவும்

அறைதனில் மறைந்து ஓடவும்

நீல நடுவினில் நீங்காத பச்சையும்

நின்று உலாவுமாமே கண்டு கலி தீருவோமே (பளிங்கு)

3. சொல்வதற்கரிதான சுகமே

தோணுதே இந்த காய உலகினில்

காலமும் நீயும் காணாத புதுமை

கண்டால் அதற்கு நிகர் வேறில்லையே

அளவில்லாத ஆனந்தமே அகத்திலறியலாமே (பளிங்கு)

4. மாறாமல் நினைவை மஹ்பூபில் நோக்க

நூறானியாக ஜொலிக்கு மிருதயம்

கேட்குமே ஜரஸதினோசை

நோக்கில் லிமனில் முல்குல் யவ்ம என்பதாமே

பர்க்கை நீக்கிப் பார்க்கலாமே

பாரெங்கும் பகட்டுமாமே (பளிங்கு)

**கீதம் 43**

(பால்யென்போ லொருவர் என்ற மெட்டு)

மேவியணைய ஒருவர் மேதியினியிலில்லை

தாவி ஒதுங்க ஒரு தாபரமில்லை (மேவி)

2. ஹைதராபாதொலியை காணாமல் வாடி

காதலின் வேதனையால் கலங்கவுமானேன்

காதிரொலியாலே கூவியழலானேன்

மாறாத் துயரத்தால் தேய் பிறை போலானேன் (மேவி)

3. உலகாசை என்ற நோய் உருக்கொண்டதாலே

ஜலதூசிபோல் உலகில் யான் அலையலானேன்

கொல்லனுலைபோல கொதிக்குதே உள்ளமது

சொல்லியழ வேறொருவர் தேசமதிலில்லையே (மேவி)

4. பார்க்கு மிடமெங்கும் பரிபூரணமானோனை

சேரும் விதமறிய செய்திடுவோரே

இருதமிருந்தே எனை யாட்சி செய்தே

கருவதாய் நின்றவனை காட்சி செய்வீரே (மேவி)

**கீதம் 44**

(காதலின் மதியோ என்ற மெட்டு)

ஆதியின் விதியோ இந்த அடிமையின் கதியோ

என் நேரில் வந்து வீசும் சுடரொளி காணேனையோ (ஆதி)

2. சூழ்ந்திடும் கடலாழிதனிலே வாழ்ந்திடும் மரக்கலமானேன்

துணைபுரிவாரிலையே யாரஸூலல்லாஹ்

திருமதினாவிலே உருவமைந்த ஜோதியே (ஆதி)

3. மஷாயிகுமார்கள் தனிலே மறைத்துருவான ம:ஷூகே

மஹ்ளியத்தான தாத்திலே தகுதியாயுதித்த யாரஸூலல்லாஹ்

அண்ணல் நபிமார்க்கெல்லாம் அரசரானீரே (ஆதி)

4. ஆரிபீன்கள் அகந்தனிலே நூரதாய் நின்றிலங்கியே

காட்சி புரிந்திடும் கண்மணியே காதலானேன் யாரஸூலல்லாஹ்

மதீனா நகர் தூரமே மானே என் செய்குவேன் (ஆதி)

5. மாமதீனா நகர்தனிலே பொதிந்த மண்ணதாய் யானேனில்லை

சீரதுவாய் அணைந்த செருப்பதுவாய் யானேனில்லை யாரஸூலல்லாஹ்

குல்ஹுவல்லாஹு வானதில் குறித்த பொருளாகினீர் (ஆதி)

6. அல்லாஹு அஹமதென்றே அருளியதில் தான் நின்றே

ரபுரபின் மீதேறியே கடந்தே ரஹ்மானிடம் சேர்ந்தீர் யாரஸூலல்லாஹ்

பகான காபகவ்ஸைனிஅவ் அத்னாவாகினீர் (ஆதி)

**கீதம் 45**

(ஆண்டவா என்னை சோதிக்கலாமா என்ற மெட்டு)

ஆண்டவா என்னை சோதிக்கலாமா இந்த

அடியான் படுந்துயரம் ஆற்றிடப்போமோ (ஆண்)

2. ஆதமு தனிலே எனையுமமைத்தாயே

ஆகாது என்றே கோதம்பை விதித்தாயே

கூறும் ரூபூபிய்யத் தென்றே குறித்தாயே

வாழும் உபூபிய்யத் தனில் மறைந்தாயே (ஆண்)

3. இய்யாக்க நஃபுதுவான ருபூபிய்யா

வஇய்யாக்க நஸ்தயீனா உபூதிய்யா

வையகம் தனிலெல்லாம் வாழும் பொருளெல்லாம்

துய்யவனை தினம் துதிக்குதே மெய்யாய் (ஆண்)

4. குர்புல் பராயிளின் குறிப்பதனை நாடி

குர்புன் னவாபிளின் கொள்கைதனை தேடி

தாத்து சிபாத்தின் ரகசியத்திற் கூடி

தானென்பதை நோக்க நானென்பதை நீக்க (ஆண்)

5. எங்கும் நிறைந்து சிறந்துமே

என்னிலிருந்து எனை ஆட்சிகள் செய்துமே

முன்னாளிலேதானே முழுதும் வகுத்துமே

பின்னாளிலே யென்னை பிரித்து நீ கேட்டிட (ஆண்)

*முற்றும்.*

**எங்கள் ஷெய்குனா ஸூபி ஹழரத் (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ்)**

**அவர்களால் பாடப்பட்ட பாடல்கள்.**

**கீதம் 1.**

அஸ்ஸலாமு அலைக்கு முஸ்ஸலாமு அலைக்குமு

அஸ்ஸலாமு அலைக்கு முஸ்ஸலாமு அலைக்குமு

மதி பிறந்ததோ- மாநிதி திறந்ததோ

என்கதி பிறந்ததோ வருக அஸ்ஸலாம் அலைக்க

ஆதி தூதரே அருளான வேதரே

என் ஆசை நாதரே வருக அஸ்ஸலாம் அலைக்க

அகமகிழ்ந்ததே ஒளிவால் நிறைந்ததே

என்உளம் குளிர்ந்ததே வருக அஸ்ஸலாம் அலைக்க

கஸ்தூரி வாசமெ கினம் கமழ்ந்து வீசுமே

பலகாத தூரமே வருக அஸ்ஸலாம் அலைக்க

மதியைப் பழித்தோரே மாமறைகள் புகழ்ந்தோரே

என்மனதை கவர்ந்தோரே வருக அஸ்ஸலாம் அலைக்க

அய்னில்லா அரபியே- மீமில்லா அஹ்மதே

அர்ஷலாவும் சிரசுடைய அண்ணலே ஸலாம்

பளீர் முகத்தையே-நும் பவழ இதழையே

பார்த்தவர் மிகவும் பாக்கியசாலியாவரே

காதலானேனே-உமைக்காண வந்தேனே

நுங்கள் கதத்திலெப்ப வீழ்வதென்று கதறியழுதேனே

காலை பிடித்தேனே-என் கண்ணில் வைத்தேனே

உங்கள் கருணைக் கரத்தாலென்னை காத்து இரட்சித்தருள்வீரே

திங்களா முகம்-திவ்ய மங்களா குணம்

தமியே னென்னை தாபரித்து தாளைத் தாருமே

காவம் போகவே-பரிதாபம் நீங்கவே

பார் புகழும் உமது பொற்பாதம் தாருமே.

**கீதம் 2**

என்னழகில் மயங்கி மண முடிக்க வந்த நேசரே

எனக்கு மஹர் மிகுதமாகும் மொழியக் கேளும் நேசரே

நொந்த மனமும் நோய்ந்து மெலிந்து தோய்ந்து போன திரேகமும்

நொடிப் பொழுதும் தூக்கமறியா தூய்மையான கண்களும்

என்னையன்றி வேறெவர்க்கும் இடம் கொடாதென் ஆசையால்

ஏங்கி ஏங்கி துடிதுடிக்கும் துக்கமான உள்ளமும்

இவைகள் யாவும் ரொக்கமாக கொடுக்க வேண்டும் விரும்பினால்

இதற்கு தவணை இல்லை இல்லை சொல்ல வேண்டாம் நேசரே

சாவில்லா சுகவாழ்வை நாடில் செத்துப்போக வேண்டுமே

சேர்த்து வைக்கும் சால சிறந்தவழி இதுவே நேசரே

நடையன் இரண்டும் கழட்டிவிட்டு நடந்து வாரும் இவ்விடம்

நமது சுத்த திருவடியாம் சன்னி தானம் நேசரே

இரு உலகம் வேறெனும் 'ஙைரியத்' தாம் மற்ற நடையன் நேசரே

யாரை காதல் வைத்தீர் என்று உம்மை கேட்கில் செப்புவீர்

யானே காதலன் என்னையே யான் காதலித்தேன் நேசரே!

www.sufimanzil.org